

# இடம் பொருள் கலைஞர்

62

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் மினி பஸ்!**



# மினி பஸ்! சமூக இணைப்பைச் சீராக்கிய சிற்றுந்து!

முத்தமிழறிஞர் கலைஞரால் தமிழ்நாட்டில் போக்குவரத்துத்துறை அரசுடைமையான பிறகு மாநிலத்தின் பெரிய நகரங்களுக்கு கிராமத்தில் இருந்த மக்களும் சென்று வர முடிந்தது.

கிராமங்களை நகரங்களுடன் தமிழ்நாடு அரசுப் பேருந்துகள் இணைத்தாலும், கிராமங்களுக்குள்ளே பேருந்துகள் செல்ல முடியாத நிலை பல ஆண்டுகளாக இருந்தது. முறையான சாலை வசதிகள், குறுகலான சாலைகளில் செல்வதற்கேற்ற பேருந்துகள் இல்லாதது என அதற்குப் பல காரணங்கள் இருந்தன. இதனால் நகரங்கள் 50 அடி முன்னேறிச் சென்றால், அவற்றின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல், ஒவ்வோர் அடியாக கிராமங்கள் முன் நகர்ந்து கொண்டிருந்தன.



தமிழ்நாட்டின் வளர்ச்சியில் இப்படி ஓர் இடைவெளி இருப்பதைத் தெரிந்துகொண்ட கலைஞர் அவர்கள், 1997-1998 நிதிநிலை அறிக்கையின் போது, 'கிராமங்கள் நாட்டின் முதுகெலும் பென்றால், குக்கிராமங்கள் நாடி நரம்புகளாக இருக்கின்றன' என்று கூறி கிராமங்களுக்கு 'மினி பஸ்' சேவையை வழங்குவது குறித்த ஓர் அறிவிப்பை வெளியிட்டார்.

## முதலாளிகளின் பேராசைக்கு வேட்டு

அந்த அறிவிப்புக்குப் பிறகு, சட்டமன்றத்தில் நடைபெற்ற நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசும்போது, தனியார் பேருந்து நிறுவனங்களின் பேராசையைச் சுட்டிக்காட்டி, நம் கழக அரசு மேற்கொண்ட நடவடிக்கை குறித்து விளக்கினார்.

"இன்றைக்கு தமிழ்நாட்டில் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் 15,737 இயங்கிக் கொண்டிருக்கின்றன. தனியார் பேருந்துகள் 6,736 இயங்கிக்கொண்டிருக்கின்றன.

இந்தத் தனியார் பேருந்துகள் கடந்த காலத்தில், நாம் ஆட்சிக்கு வருவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன், கிராமங்களுக்கு இந்தப் பேருந்துகள் போகாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. கிராமங்களுக்குப் பேருந்துகள் போகாமல் இருப்பதற்குப் பேருந்து முதலாளிகள் எல்லாம் சேர்ந்து 'நாங்கள் இஷ்டப்படி எங்கு செல்வோமோ அங்குதான் செல்வோம். கிராமங்களுக்குச் செல்ல மாட்டோம்' என்று 'கர்டெய்ல்மென்ட்' என்ற ஒரு நிலையை ஏற்படுத்திக் கொண்டார்கள். அதற்குப் பல கோடி ரூபாய் அவர்கள் செலவழித்தார்கள். ஆட்சிக்கு நாம் வந்தவுடன், இந்த அவையிலே சட்டத்தை இயற்றி கிராமங்களுக்கும் பேருந்துகள் செல்லக்கூடிய நிலையை உருவாக்கினோம். அடைக்கப்பட்ட வழியைத் திறந்துவிட்டோம்" என்றார்.

### கிராமங்களில் நிகழ்ந்த புரட்சி!

இந்தச் சிற்றுந்துத் திட்டம் குறித்து, பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை அனைத்தும் சொல்கின்ற ஒரு விஷயம், மினி பஸ்கள் கிராமப்புறங்களில் பெரும் புரட்சியை நிகழ்த்தின என்பதைத்தான். அங்குள்ள மக்கள் பெரும்பாலும் அந்தப் பேருந்துகளை மருத்துவமனைக்குச் செல்லவும், உழவர் சந்தைகளுக்குப் பொருட்களைக் கொண்டு போகவுமே அதிக அளவில் பயன்படுத்தியதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்தத் திட்டத்தின் வெற்றியைப் பார்த்து, அப்போதைய கர்நாடக அரசு, **'கிராமின சாரிகே'** என்ற பெயரில் மினி பஸ்களை அங்கு அறிமுகம் செய்தது குறிப்பிடத்தக்கது.

## வாத்து முட்டை கிராமங்கள்

மேலும் அந்த உரையில், கலைஞர் சொன்ன விவரங்கள், ஒரு தலைமுறை தமிழ்நாட்டுக் கிராமங்களைப் படம் பிடித்துக் காட்டுவதாக இருந்தன. கிராமப்புறங்களில் சிற்றுந்துகளை ஓடச் செய்யும் எண்ணம் தனக்கு எப்படி ஏற்பட்டது என்பதைப் பற்றி அவர் இப்படிச் சொல்கிறார்:

"எனக்கு இந்த நினைவு எப்படி வந்தது என்றால், 1957-ஆம் ஆண்டு குளித்தலை தொகுதியில் நான் போட்டியிட்டபோது, வெள்ளியணைப் பகுதியில் நான் வாக்குக் கேட்கச் சென்றபோது, அவை குக்கிராமம், பட்டிதொட்டியாக இருந்தன. அங்கே சில பேர் என்னைப் பார்த்துக் கேட்டார்கள், 'மகாத்மா காந்தி உயிரோடு இருக்கிறாரா?' என்று. எப்போது 1957-ஆம் ஆண்டு! 'எப்படி இருக்கிறார். இப்போது வந்து போனாரா?' என்று கூடக் கேட்டார்கள். அவ்வளவு மோசமான நிலைமையில், அறிவு கொடுக்கப் படாத கிராமங்கள் அந்தப் பகுதியில் இருந்தன. அங்கே எல்லாம் காலை உணவு கிடையாது. வாத்து முட்டைதான். வாத்து முட்டையைத்தான் கடைகளிலே அடுக்கி வைத்திருப்பார்கள். பெரிது பெரிதாக இட்டிலி போல இருக்கும். அதை வாங்கித்தான் காலை உணவாக சாப்பிடுவார்கள்.

> **2006-2011 காலகட்டத்தில், 2,334 சிற்றுந்துகள் இயக்கப்பட்டன. மேலும், 2,112 சிற்றுந்துகளுக்கு அனுமதி வழங்கப்பட்டன.**

அப்படிப்பட்ட குக்கிராமங்களிலேகூட வேன்களில், 10 பேர் தாராளமாக அமரக்கூடிய வேன்களில் 50 பேர், 60 பேர். இருக்கைகளிலும் இருப்பார்கள், ஓரத்திலும் தொத்திக் கொண்டும் இருப்பார்கள், அதனுடைய கூரையிலும் உட்கார்ந்து கொண்டு இருப்பார்கள். மண்ணை வாரித் தூற்றிக்கொண்டு மிகக் குறுகலான ஆற்று ஓரப்பாதைகளில் அந்த வேன்கள் செல்கிற கோரக்காட்சியை நான் பார்த்திருக்கிறேன். கவிழ்ந்தால், ஒரு 50 பேர் சாவார்கள். அப்படிப்பட்ட நிலைமையிலேதான் அங்கே போக்குவரத்து இருந்தது.

அது சீரடைந்துவிட்டதா என்றால், உண்மையாகச் சீரடையவில்லை. இன்னும் அந்தக் கிராமங்கள் நாட்டில் இருக்கத்தான் செய்கின்றன. அதிலும் குறிப்பாக வளர்ந்த மாநிலம் என்று சொல்லப்படுகின்ற தமிழ்நாட்டிலே அத்தகைய கிராமங்கள் இன்னும் இருக்கின்றன. அத்தகைய குக்கிராமங்களில், பட்டிதொட்டிகளில் இருக்கின்ற ஏழை எளிய மக்களைப் பேருந்துகளில் செல்லக்கூடிய வசதியைச் செய்ய வேண்டும் என்பதற்குத்தான் இந்த வேன் -மினி பேருந்து திட்டமே தவிர வேறல்ல.

அந்தத் திட்டத்தைப் பரீட்சார்த்தமாகச் செய்து பார்ப்போம். அதைத் தேசியமயமாகச் சாக்கார் தான் செய்ய வேண்டும் என்று சொன்னால், எவ்வளவு செலவாகும் என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். பேருந்து போகிற தடங்களில் இந்த வேன்களை அனுமதிக்கமாட்டோம். பேருந்து போக முடியாத கிராமங்களுக்குத் தான் இந்த வேன்கள் செல்லமுடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்".

## வழக்கும் விளைவும்

இந்தச் சிற்றுந்துத் திட்டம் முதலில் 20 கிலோமீட்டர் தூரம் வரை செல்ல அனுமதி வழங்கப்பட்டது. அதாவது 4 கிலோ மீட்டருக்கு பேருந்துகள் இயங்குகின்ற தடத்திலே சென்று 16 கிலோ மீட்டருக்கு பேருந்து இல்லாத வழித்தடங்களிலே செல்லலாம் என்று அரசு சட்டம் பிறப்பித்தது. அதன் அடிப்படையில் 1998 முதல், 802 பேர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டு, 1999-ஆம் ஆண்டு ஏப்ரல் மாத வாக்கில், 516 பேருந்துகள் இயங்கிக் கொண்டிருந்தன.

மக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்த அந்தத் திட்டத்தை விரிவாக்குகிறபோது, மினி பஸ்களின் பயணத் தொலைவு தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட பொதுநல வழக்கு ஒன்றினால், சில ஆண்டுகள் மினி பஸ் சேவை பாதிக்கப்பட்டது. பிறகு மீண்டும் 2006-இல் கழக அரசு அமைந்தவுடன் சிற்றுந்துச் சேவை தொடங்கப்பட்டது. 2006-2011 காலகட்டத்தில், 2,334 சிற்றுந்துகள் இயக்கப்பட்டன. மேலும், 2,112 சிற்றுந்துக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டன. ஆனால் அடுத்து வந்த அரசு, கலைஞர் கொண்டு வந்த இந்தத் திட்டத்தில் தனது ஸ்டிக்கரை ஒட்டிக்கொண்டது!

**...வலம் வருவோம்**

## கலவர விதை முறியடிக்கப்பட வேண்டும்!



தேர்தல் கணிப்புகளில் பாசிச பா.ஜ.க.வை அகற்ற மக்கள் தயாராகி வருவது தெளிவாகியுள்ளது. இந்த நிலையில், சமூகப் பதற்றத்தினை உருவாக்கி, அதை, தேர்தல் அறுவடையாக்கத் தயாராகி வருகிறது பா.ஜ.க. கர்நாடகாவில் மசூதி அருகே, அனுமன் பாடல்களை ஒலிக்க விட்டு தகராறு ஏற்படுத்தி உள்ளனர். ரமலான் நோன்பின்போது பாங்கு நேரத்தில், அதற்கு இடையூறாகப் பாடல்களை ஒலிக்கவிட்டு, அதன்மூலம் கலவரத்தைத் தூண்டுவது என்பது பா.ஜ.க. தொடர்ச்சியாக கடைப்பிடித்து வரும் உத்தியாக உள்ளது. பீகார், உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இதுபோன்ற பல நிகழ்வுகளை பா.ஜ.க. நிகழ்த்தியுள்ளது. இப்போது கர்நாடகாவில் தொடங்கி இருக்கின்றனர்.

கர்நாடக மாநில அரசு கலவரத்துக்குத் திட்டமிட்டுக் கூடியவர்களை கைது செய்த நிலையில், சமீபத்தில் அங்கு ஓர் ஓட்டலில் நிகழ்ந்த அசம்பாவிதத்துடன் தமிழ்நாட்டைப் பொருத்திப் பேசி இருக்கிறார் பா.ஜ.க. ஒன்றிய அமைச்சர் ஒருவர். சமூகப் பதற்றத்தை உருவாக்கி, மக்களைப் பிளவுபடுத்தும் அரசியலையே பா.ஜ.க. விரும்புவதை, இதன்மூலம் அப்பட்டமாகத் தெரிந்து கொண்டுள்ளனர் மக்கள். கர்நாடகாவில் கலவர விதை முறியடிக்கப்பட வேண்டும். நாடு முழுவதும் பா.ஜ.க. அரசியல் அகற்றப்பட வேண்டும் என்பதையே மக்கள் விரும்புகின்றனர்.



## ஃப்ளாஷ்பேக்



எம்.ரவீந்திரன்

### இராமநாதபுரம் வருகை!

1986-ஆம் ஆண்டு, இராமநாதபுரம் மாவட்டத்தில் கழக இளைஞர் அணிக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் வருகை தந்திருந்தார். அன்றைய இராமநாதபுரம் மாவட்ட அமைப்பாளராக இருந்த பெருநாழி. வி.போஸ் அவர்கள் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். கூட்டத்தில் பங்கேற்பதற்கு முன், மதுரையில் தங்கி இருந்த தளபதி அவர்களை சந்தித்து புகைப்படம் எடுக்கும் வாய்ப்பு அமைந்தது.

**–எம்.ரவீந்திரன்,**
**வட்டச் செயலாளர், சிவகங்கை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### அரசுப் பணியாளர்கள்!

1924-ஆம் ஆண்டில், நீதிக்கட்சி ஆட்சியில் பனகல் அரசரின் அமைச்சரவையில் உருவாக்கப்பட்ட பணியாளர் தேர்வுக் கழகம், 1929-ஆம் ஆண்டில், பணியாளர் தேர்வு ஆணையமாக மாற்றப்பட்டது. இந்தியாவிலேயே இத்தகைய அமைப்பு முதன்முதலாக சென்னையில்தான் ஏற்படுத்தப்பட்டது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

424

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.